# களஞ்சியம்

Appropriate Technology Services
121, POINT P... ROAD
NALLUR, JA...NA
No. 2866



## நன்றியுடன் துதி செய்வோம்

ஒன்று சேர்ந்து வாழுவோம்
ஒற்றுமையை பேணுவோம்
என்றும் இன்பம் ஓங்கவே
இலங்கை நாட்டை ஆக்குவோம்.

அன்பு செய்யும் தாய் தந்தை
ஆசிரியர் அன்னவர்
நன்றியுடன் துதிசெய்வோம்
நாமுயர்ந்து வாழவே

- மணியம் -

யுனிசெப் ஆதரவுடன்
தேசியக் கல்வி நிறுவகத்தின்
ஆரம்பக் கல்வி செயற்றிட்டத்தின் வெளியீடு

Appropriate Techn... Services
121, POINT P... AB
NALLUR, ... NA
No. 2866

# இவ்விதழில். . .

தலையங்கம்

இலங்கைப் பிள்ளைகளின் புகுநிலைத்திறன்
தொடர்பான ஆய்வு

- சித்ராங்கனி அபயதேவ
பணிப்பாளர் ஆரம்பக் கல்வி

பேச்சு வழக்கும் ஆரம்ப வகுப்புகளில்
மொழி கற்பித்தலும்

- P. சுப்பிரமணியம்
பிரதம செயற்றிட்ட அதிகாரி

வசதிகுறைந்த பாடசாலைகளில் உள்ள
மெதுவாகக் கற்போருக்கான தொழிற்பாடுகள்

- M.P.M.M. ஷிப்லி
செயற்றிட்ட அதிகாரி

வளம் பெறும் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியின்
தரத்தினை மேம்படுத்துவதற்கான கையாண்டு பார்த்தல்

- L.S. குறுப்பு
பிரதம செயற்றிட்ட அதிகாரி

பரிகாரக் கற்பித்தல்

- M.P.M.M. ஷிப்லி
செயற்றிட்ட அதிகாரி

# தலையங்கம்

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆரம்பக் கல்விச் செயற்றிட்டத்தினுல் ''களஞ்சியம்'' அரையாண்டுக்கொரு முறை வெளியிடப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆரம்பக் கல்வி வகுப்புகளில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் கருத்துக்களை வெளியிடுவதற்கும் கல்வித் தேவைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கும் சந்தர்ப்பம் வழங்குவதனுல் ஆரம்பக் கல்வியின் தரத்தின் அபிவிருத்தியை இன்னும் விருத்தி செய்வது இன்றைய தேவைகளுள் ஒன்ருகும். ஆரம்பக் கல்விப் புலத்தினுள் காலத்திற்குகந்த கல்வி அபிவிருத்தியில் ஆசிரியர்களைப் பங்குபற்றச் செய்வது இச் சஞ்சிகையின் நோக்கங்களுள் ஒன்ருகும். இதனூடாகக் கற்பித்தல் செயல்முறையை மிக இலகுவானதாகவும் அர்த்தமுடையதாகவும் ஆக்குவதற்கான வழிமுறைகளை வெளிக்கொணர முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விதழில் பாடசாலைக்குப் பிரவேசிக்கும் பிள்ளைகளின் திறன்கள் பற்றிய, அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் பெறுபேறுகளை விளக்கும் கட்டுரையொன்று முக்கிய இடத்தை வகிக்கின்றது. இந்த ஆய்வு கடந்த ஆண்டு ஹங்கேரியா அட்டில்லா பல்கலைக் கழகப் பேராசிரியர் கலாநிதி ஜோசப் நாகி என்பாரின் வழிகாட்டலுடன் ஆரம்பக் கல்விச் செயற்றிட்டத்தினுல் நடாத்தப்பட்டது. தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் இவ்வாய்வை நடத்துவதற்கு கொழும்பு, கம்பஹா, நுவரேலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டனர். இதிலிருந்து பெறப்பட்ட முடிபுகள் ஆரம்ப வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, அதுவும் குறிப்பாக ஆண்டு 1 இற் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, தமது மாணவர்களைப் பற்றி இன்னும் விரிவாக அறிந்து கொள்வதற்கும் அதற்கேற்ப அவர்களின் கல்வி விருத்திக்கான திட்டங்களை திட்டமிடுவதற்கும் வழிகாட்டியாக அமையுமென எதிர்பார்க்கிருேம்.

இச்சஞ்சிகை ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் தொழிற்றிறமையையும் ஆரம்பக் கல்வியின் தரத்தையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருப்பதால் உங்களது அனுபவங்களை மற்றைய ஆசிரியர்களோடும் இதனூடாகப் பகிர்ந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்ருேம்.

- பதிப்பாசிரியர் -

# இலங்கைப் பிள்ளைகளின் புகுநிலைத்திறன் தொடர்பான ஆய்வு

**சித்ராங்கனி அப்பயதேவ**
**பணிப்பாளர் /ஆரம்பக்கல்வி**

இலங்கையில் முறைசார் பாடசாலைகளுக்குப் பிரவேசிக்கும் பிள்ளைகளின் புகுநிலைத் திறன்களை கண்டறியும் பொருட்டு ஓர் ஆய்வு தேசிய கல்வி நிறுவகத்தின் ஆரம்பக் கல்வி செயற்றிட்டத்தினால் 1988 ஆம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டலும் ஹங்கேரியா நாட்டைச் சேர்ந்த கல்வியியலாளரும் உளவியலாளருமான ஹங்கேரியா அட்டில்லா ஜோசப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி ஜோசப் நாகி அவர்களினால் வழங்கப்பட்டன.

இந்த ஆய்வின் முக்கிய நோக்கம் ஆண்டு 1 இற் பிரவேசிக்கும் பிள்ளைகளிடையே காணப்படும் தேர்ச்சி மட்டத்தைக் கண்டறிதலாகும். ஆண்டு 1 இற் பிரவேசிக்கும் பிள்ளைகளின் தேர்ச்சி மட்டத்தை அறிந்திருத்தல் பாடவிதான திட்டமிடலுக்கும் அதன் அமுலாக்கத்திற்கும் அவசியமானதாகும்.

அதிகளவில் கற்றலுக்கான உதவி தேவைப்படும் பிள்ளைகளை இனங்காண்பதனால் அவர்களுக்குத் தேவையான மேலதிக உதவியை வழங்குதலுக்கும் கற்றற் செயற்பாடுகளை மிகப் பயனுடைய செயல்முறைகளாகத் திட்டமிடுவதற்கும் இவ்வாறான ஆய்வுகளிலிருந்து பெறப்படும் தரவுகள் பயன்படும். பல்வேறு மட்டங்களில் உள்ள இப்பிள்ளைகளின் திறன்களை இனங்காண வேண்டியது அவர்களை வகைப் படுத்துவதற்காகவோ தனித்தனி குழுக்களாக்குவதற்கோ அல்ல, அவர்களுக்குப் பொருத்தமான பல்வேறு கற்றற் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்காகவே என்பதை விளங்கிக் கொள்ளுதல் முக்கியமாகும்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களுள் சிலரை தனிப்படுத்தி உதவி வழங்க நேரிடுவதை அநேகமான ஆரம்ப வகுப்புகளிற் காணலாம். இதனால் வகுப்பு ரீதியாக குழுவாகச் செய்யப்படும் கற்றற் கற்பித்தற் செயல்முறைகள் எவையேனும் புறக்கணிக்கப்படுவதில்லை. புறக்கணிக்கப்படுவதும் கூடாது. உதவி தேவைப்படும் பிள்ளைகளுக்கு ஆரம்பத்திலேயே முறையான கவனிப்பு கிடைக்காதிருப்பின் விரைவில் அப்பிள்ளைகள் ''வேலை செய்ய முடியாதவன்'', ''பின்தங்கியவன்'' என்றவாறு இனங்காணப்படுவர். இவ்வாறு நடைபெறுதிருப்பதற்கு அப்பிள்ளைகளுக்குத் தேவையான கூடிய கவனிப்பு ஆரம்பத்திலேயே வழங்கப்பட வேண்டும்.

புகுநிலைத்திறன் ஆய்வின்போது பின்வரும் திறன்கள் தொடர்பான சோதனைகள் நடத்தப்பட்டன.

மொழித்திறன்: எழுத்துக்களை எழுதுவதற்குத் தேவையான புலனியக்கத் திறன்கள் தனித்தனியாக எழுதப்படல் வேண்டும்.
எழுத்து வாசித்தல்
தொடர்புகள் பற்றிய விளக்கம்
வசன அமைப்பு

கணிதத்திறன்: எண் விளக்கம் (எண் பெயர்களை வாசித்தல் உருக்கள், பொருள்கள் மூலம் அளவுகளைக் காணல்)
எண்ணுதல்:

சமுகத்திறன்கள்: அவதானிப்பு
வேலையில் ஈடுபடுதல்,
அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல்,
அறநெறி மதிப்புகள்
சமவயதுடையோருடன் தொடர்பு,
வளர்ந்தோருடன் தொடர்பு.

இந்த ஆய்வுக்கு 1988 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆண்டு 1 இற் பிரவேசித்த 1800 மாணவர்கள் உட்படுத்தப்பட்டனர். எல்லா வகைப் பாடசாலைகளும் இதில் உள்ளடக்கப்பட்டதோடு சிங்கள, தமிழ் மொழி ஆகிய இரு மொழி மூலப் பாடசாலைகளிலும் ஆய்வு நடத்தப்பட்டது.

**பிரதிநிதிப்படுத்தப்பட்ட பாடசாலை வகைகள்**

| | |
|---|---|
| 3 | 46.3 |
| 2 | 25.2. |
| 1C | 22.8 |
| 1A, B | 5.6 |

**இப்பாடசாலைகளின் அமைவிடங்கள்**

| | |
|---|---|
| கிராமிய (வசதியுள்ள சூழல்) | 35.3 |
| கிராமிய (வசதியற்ற சூழல்) | 36.2 |
| நகர (வசதியுள்ள சூழல்) | 10.4 |
| நகர (வசதியற்ற சூழல்) | 18.1 |

200 முன் பள்ளி மாணவர்களும் 200 ஆண்டு 1 இன் இறுதியில் இருந்த மாணவர்களும் இவ்வாய்விற்கு உட்படுத்தப்பட்டனர் பாடசாலைக்குப் பிரவேசிக்கும் மாணவர்களின் மட்டங்களை ஒப்பிடுவதற்கு இத்தரவுகள் மிகவும் பயனுடையதாகவிருந்தன

ஆண்டு 1 இற் பிரவேசிக்கும் மாணவர்களின் தேர்ச்சியை தொகுத்து நோக்கிய போது பின்வரும் திறன் மட்டங்கள் வெளிப்பட்டன.

**ஆண்டு 1 புகுநிலைத் திறன் மட்டங்கள்**

| திறன் மட்டம் | நூற்றுவீதம் |
|---|---|
| ஆண்டு 1 கற்றல் நடவடிக்கைகளுக்கான தேர்ச்சி இல்லாதோர் | 08 |
| தேர்ச்சி பெறுவதற்கு விசேட உதவி தேவைப்படுவோர் | 22 |
| ஆண்டு 1 கற்றல் நடவடிக்கைகளுக்கான தேர்ச்சி பெற்றோர் | 62 |
| ஆண்டு 2 இற்குரிய தேர்ச்சி பெற்றோர் | 7.5 |

முன்குறிப்பிட்டள்ளவாறு இவ்வாறான தரவுகள் எமக்குத் தேவைப்படுவது மாணவர்களை ''திறனுள்ளவர்கள்'' ''திறனற்றோர்'' என வகைப்படுத்துவதற்காக அல்ல. அவர்களின் திறன் மட்டங்களை இனங்கண்டு அவர்களுக்குப் பொருத்தமான கற்றற் செயற்பாடுகளை திட்டமிடுவதற்கே இவை அவசியமாகின்றன.

இலங்கையில் ஆண்டு 1 இற் பிரவேசிக்கும் பிள்ளைகளிடையே இவ்வாறான பல்வேறுபட்ட தன்மைகள் உள்ளன. அவ்வாறான பல்வேறு மட்டங்களைக் கொண்ட வகுப்பொன்றில் ஒரே வாசிப்பு நூலையோ செயல் நூலையோ எவ்வாறு பரிமாறிக் கொள்ளலாம்? எழுதுஞ் செயற்பாடுகளை எவ்வாறு திட்டமிடலாம்?

மேலேயுள்ள தரவுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவ்வாறான பல வினாக்கள் எழும்பும். தற்போது ஆரம்பப் பாடசாலைகளில் ஆண்டு 1, 2 வகுப்புகளில் கூட சில மாணவர்களுக்கு ஒரே வகுப்பில் இரு ஆண்டுகள் தங்கி இருக்க நேரிடுகிறது. மாணவர்களின் புகுநிலைத் திறன் மட்டங்கள் பற்றிய தகவல்களைக் கருத்திற் கொள்ளும் போது இது ஆச்சரியப்படத்தக்க தொன்றல்ல. பாடசாலையிற் பிரவேசிக்கும் போது எழுத்தொன்றின் வடிவத்திற்கு ஒத்த உருவொன்றை வரைய முடியாத, கிறுக்குவதற்கு மட்டும் தெரிந்த பிள்ளைகள் இருப்பதோடு சில எழுத்துக்களை அல்லது சில சொற்களை சரியாக எழுதக்கூடிய பிள்ளைகளும் உள்ளனர். இவ்வாய்விற்கேற்ப

பாடசாலைக்குப் பிரவேசிக்கும் இப்பிள்ளைகளிடையே 89% ஆனோர் ‘‘ட’’ என்ற எழுத்தையும் 25% ஆனோர் ‘‘ப’’ என்ற எழுத்தையும் அறிந்திருந்தனர். (தமிழ் மொழிக்குரிய தரவுகள் இன்னும் பகுப்பாய்வு செய்யப்படவில்லை). முன்பள்ளி கல்வி பெற்ற பிள்ளைகள் கூடிய எண்ணிக்கையான எழுத்துக்களை அறிந்திருந்தனர். வசதிகுறைந்த சூழலில் அமைந்துள்ள பாடசாலைகளில் உள்ள பிள்ளைகள் குறைந்த எண்ணிக்கையான எழுத்துக்களையே அறிந்திருந்தனர். (அதாவது இத்தரவு ஆரம்பக் கல்விப் பாடவிதானம், கற்பித்தல் முறைகள் தொடர்பாகப் பயன்படுத்தக் கூடிய முக்கிய காரணியெனக் குறிப்பிடப்பட வேண்டும்.) ஆரம்பக் கல்விக்காக மட்டுமல்ல முன்பள்ளிக் கல்வித் தொடர்பாகவும் பெற்றோர் கல்வி தொடர்பாகவும் இவ்வாய்வின் கண்டுபிடிப்புகளை பலனளிக்கக் கூடியதாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இவ்வாய்வின் போது மொழி, கணிதம் தொடர்பாகத் தனித்தனியே பெறப்பட்ட தேர்ச்சி மட்டங்கள் பின்வருமாறு.

| திறன் மட்டம் | மொழி% | கணிதம்% |
|---|---|---|
| ஆண்டு 1 இன் கற்றல் நடவடிக்கைகளுக்கான தேர்ச்சி இல்லாதோர் | 6 | 3 |
| ஆண்டு 1 இன் கற்றல் நடவடிக்கைகளுக்காக விசேட உதவி தேவைப்படுவோர் | 22 | 27 |
| ஆண்டு 1 இற் கற்றல் நடவடிக்கைகளுக்கான தேர்ச்சி உள்ளோர் | 62 | 64 |
| ஆண்டு 2 இற் கற்றல் நடவடிக்கைகளுக்கான தேர்ச்சி உள்ளோர் | 8 | 10 |

தமிழாக்கம்: எஸ்.எம்.ஆர். சூதீன்

ஆசிரியர் (தி)கைப்பு

ஆசிரியர்: கரி, கறி என்பவற்றுள் அடுப்பில் இருப்பது எது?

மாணவன்: இரண்டுமே அடுப்பிலே தானே சார் இருக்கும்.

ஆசிரியர்:

## பேச்சு வழக்கும் ஆரம்பவகுப்புகளில் மொழி கற்பித்தலும்

- P. சுப்பிரமணியம்

எந்தப் பாடத்தை எந்த நிலையில் (வகுப்பில்) கற்பதாயினும் மொழியே முக்கிய கருவியாகின்றது. கல்வியின் அத்திவாரம் பெரும்பாலும் ஆரம்பக்கல்வியிலேயே தங்கியுள்ளதெனலாம். எனவே அடிப்படை மொழித்திறன்கள் ஆரம்பவகுப்புகளிலேயே உரியவாறு விருத்தி செய்யப்படுதல் வேண்டும். இதனால் ஆரம்ப வகுப்புகளிற் தாய்மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மொழித்திறன் விருத்திக்கான பல்வேறு அணுகுமுறைகளையும் உத்திகளையும் அறிந்திருத்தல் அவசியம்.

ஒரு பிள்ளையின் படிப்படியான கல்வி விருத்தி அதன் தாய் மொழியோடு நெருங்கிய தொடர்புடையது. உகந்த மொழி விருத்தி மூலமே ஒரு பிள்ளையின் தகுந்த அறிவு, திறன், மனப்பாங்குகளை வளர்த்துக்கொள்ள முடியும். இந்த அடிப்படையில் நோக்கும் போது ஆரம்ப வகுப்புகளில் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களது பணி மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகும்.

கேட்டு உணர்ந்து இரசிக்கும் நிலையிலிருந்து தானாகவே மொழியைப் பிரயோகிக்கும் நிலையை அடையும்வரை ஒரு பிள்ளையின் பல்வேறு மொழி விருத்திச் செயற்பாடுகளும் அதன் வளர்ச்சிக்குத் துணைபுரிவனவாகும். எனவே பிள்ளைப் பருவத்து வளர்ச்சிப் பாங்கினையும், இயல்பினையும், மொழியாற்றலையும் அறிந்து அவற்றிற்குகந்தவாறு ஆரம்ப ஆண்டுகளில் மொழித்திறன்களை வளர்க்க வேண்டியது அவசியமாகின்றது.

மொழியின் அடிப்படைத் திறன்களைப் பிள்ளைகள் வீட்டிலேயே கற்க ஆரம்பிக்கின்றனர் எனலாம். எனினும் அவை தகுந்தவாறு சீராக்கம் பெறுவது ஆரம்ப பாடசாலைகளிலேயே என்பதை மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் மறந்து விடலாகாது. பிள்ளை வீட்டிலே கற்கின்ற மொழியானது திருந்திய மொழியாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் தமிழ் மொழியைப் பேசும் மக்கள் வாழ்கின்றனர். ஆயினும் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்மொழி மாவட்டங்களுக்கிடையிலும், மக்களுக்கிடையிலும், பலத்த வேறுபாடுகளைக் கொண்டு காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம், மன்னார், நுவரெலியா, கழுத்துறை, காலி மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலுள்ள பேச்சுவழக்குத் தமிழ் மொழியை ஆராய்ந்தபோது மிகையான வேறுபாடுகள் காணப்பட்டன. அதுமட்டுமல்ல ஒரு மாவட்டத்தில் பேசப்படும் மொழி ஏனைய மாவட்ட மக்களுக்கு குறிப்பாக ஆசிரியர்களுக்குமே விளங்காத நிலையிற் காணப்பட்டன. சாதாரண வழக்கிலுள்ள ‘‘அம்மா’’ என்ற சொல் மலைநாட்டுப்பகுதியில் ‘‘ஆயா, ஆத்தா’’ என்றும், காலி, கழுத்துறைப் பகுதியில் ‘‘உம்மா’’ என்றும் பேசப்படுகின்றது. ‘‘இலை’’ என்ற சொல்லைச் சில மாவட்டங்களிற் ‘‘கொள’’ ‘‘குளை’’ என்றும், ‘‘புல்லு’’ என்னும் சொல்லைப் ‘‘பில்லு’’ என்றும் பேசுகிறார்கள். யாழ்ப்பாண மாவட்டத்தில், ‘‘பேசினார்’’ என்பதை ‘‘ஏசினார்’’ என்ற பொருளில் பேசுகின்றனர், ‘‘எங்கே போகின்றாய்’’ என்பதைக் கழுத்துறை மாவட்டத்தில் ‘‘எங்கையம் போற’’ என்றே பேசுகின்றனர். பேச்சு வழக்கிலுள்ள மொழி வேறுபாடுகளை உணர்த்துவதற்கான சில உதாரணங்களே இங்கே தரப்பட்டுள்ளன.

பேச்சு வழக்கிலுள்ள மொழி வேறுபாடுகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. மொழித்திறன்களைப் பிள்ளைகள் வீட்டிலேயே கற்க ஆரம்பிக்கின்றனர் என முன்னர் கண்டோம். அவ்வாறு அவர்கள் வீட்டிலே கற்கின்ற மொழி பெரும்பாலும் பேச்சுவழக்குச் சார்ந்தவையே. இந்த நிலையில் பாடசாலையில் பிரவேசிக்கும் பிள்ளைகளின் மொழித்திறன்களை வளர்ப்பதில் ஆசிரியர்கள் சில இடர்ப்பாடுகளை எதிர் நோக்குகின்றனர். ஆசிரியர் திருந்திய மொழியிலா, அல்லது பேச்சு வழக்கிலா தனது பணியைத் தொடங்க வேண்டும் என்ற வினா எழ இடமுண்டு. ஆரம்பபாடசாலையே வீட்டையும் பாடசாலையையும் இணைக்கும் பாலம் எனக் கல்வியாளர் பலரும் வற்புறுத்தி வருகின்றனர். அத்துடன் இயல்பான கல்வி, பிள்ளை மயக்கல்வி, சூழலோடிணைந்த கல்வி, செயல்முறைக் கல்வி, சமூகமயக் கல்வி என்றெல்லாம் கல்வியின் போக்குப் பற்றிக் கல்விச் சிந்தனையாளர் பல கருத்துக்களையும் முன்வைத்துள்ளனர். இவற்றையெல்லாம் நுணுகி நோக்கும் போது, பேச்சு வழக்கிலுள்ள மொழியிலேயே, மொழி கற்பித்தல் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனத் தெரிகின்றது.

ஆண்டு 1 இல் பிரவேசிக்கும் பிள்ளைகளின் மொழிவிருத்தி, பேச்சு மொழியுடன் தொடர்பு படுத்தியே ஆரம்பிக்க வேண்டும்

என்பது உண்மையே. பாடசாலைச் சூழலுக்குப் பிள்ளைகள் பழக்கப்படும் வரை அந்தநிலை மிக மிக அவசியமானது. ஆயினும் மொழிவிருத்தியே பிள்ளையின் கல்வியின் உயிர்நாடியாக இருப்பதால் படிப்படியாகப் பேச்சு மொழியிலிருந்து, திருந்திய மொழிக்கு இட்டுச் செல்வது அவசியமானதாகும். அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகளின்போது ஆரம்ப வகுப்புகளிலல்லாது, இடைநிலைத் தரங்களிலும் மாணவர்கள் பேச்சு மொழியில் எழுதுவது காணப்பட்டது. பெரும்பாலான மாணவர்களின் மொழி வழுக்களுக்குப் பேச்சு மொழியைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதும் காரணமாக அமையலாம். எனவே திருந்திய மொழியில் பேசுதல், எழுதுதல், என்ற பாரம்பரியத்தை வகுப்பறையில் படிப்படியாக உருவாக்குதல் ஆசிரியர் பணியாகின்றது.

மாணவர்கள் வகுப்பறைச் சூழலுக்குப் பழக்கப்படும் வரை, பேச்சு மொழியையே பிரயோகித்தாலும் படிமுறையில் திருந்திய மொழிப் பிரயோகம் உட்புகுத்தப்படல் வேண்டும். பேசுதல், உரையாடுதல், விளக்கமளித்தல் போன்ற சந்தர்ப்பங்களில், மாணவர்கள் பேச்சு மொழியைப் பிரயோகிக்க அனுமதிக்கப்படலாம். அவற்றை மீளவலியுறுத்தும் போது ஆசிரியர் இலகுவான திருந்திய மொழியைக் கைக் கொள்ள வேண்டும். பெரும்பாலும் மாணவர்கள் ஆசிரியரைப் பின்பற்றியே வகுப்பறையில் மொழியைப் பேசுகின்றனர். எனவே, திருந்திய மொழிப்பிரயோகத்தை அறிமுகப்படுத்தும் பொறுப்பு ஆசிரியரையே சார்ந்ததாகும்.

பேச்சு மொழி மாணவர்களின் இயல்பான மொழி என்பது உண்மையே. அந்த இயல்பான மொழிப்பிரயோகத்தில் செம்மையை உருவாக்குதலே சிறந்த வழியாகும். சொற்களைத் தவறாக உச்சரித்தல், வழுவான சொற்களைப் பிரயோகித்தல், ஒலிவேறுபாடுகளற்றுச் சொற்களை உச்சரித்தல் போன்ற வழுக்களைப் பேச்சு மொழியிற் காணலாம். அவற்றையெல்லாம் களையும் போதுதான் மொழி செம்மையானதாக் மாறிச் சீர்மை பெறமுடியும். செம்மையான மொழிப் பயிற்சியை வகுப்பறையில் பிரயோகிப்பதன் மூலமே இதனை ஏற்படுத்த முடியும். எடுத்து எடுப்பிலே வலிந்து திருந்திய சொற்களை மாணவர்களுக்குத் திணித்தல் உகந்ததன்று. இயல்பான பரிணும முறையைப் பின்பற்றியே மொழி வழக்கை உருவாக்குதல் வேண்டும். ஆரம்ப ஆண்டுகளில் மொழியைச் சீர்மைப்படுத்தும் போது கூடியளவு மாணவர்களைக் கண்டித்தலையோ ஏளனப்படுத்துதலையோ தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஆயினும் மொழியைச் சீர்திருத்துவதில் ஆசிரியர் கண்ணுங் கருத்துமாக இருத்தல் அவசியம். இதற்கு ஆசிரியர்கள் திருந்திய மொழியை இலகுவான நடையில் பேசக்கூடிய ஆற்றலுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

பிரதேச வாரியாக மொழிவழக்கில் ஏற்படும் வழுக்களுக்குப் பல காரணிகள் காரணமாகின்றன. புவியியற் சூழல், மக்கள் பாரம்பரியம், தொழில் முறைகள், வேற்று மொழி, மத மக்கள் கலப்பு, நாகரீகப் பண்பாடு, போன்ற பல காரணிகள் மொழி வழக்கிற் செல்வாக்குச் செலுத்துகின்றன. சூழலோடொத்த இக்காரணிகளின் தாக்கத்திலிருந்து விடுவிப்பது சிரமமான பணியெனினும், ஆசிரியர்களின் நுட்பமான அணுகுமுறையால், தாராளமாக அவற்றைச் சீர்திருத்தி அமைக்க முடியும். ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியரொருவர் இன்னொரு மாவட்ட ஆரம்பப் பாடசாலையிற் கற்பிக்கும் போது சூழ்நிலை சற்று முரண்பட்டுத் தோன்ற முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களிலும் ஆசிரியரது சாதுரியமே எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலைச் சூழலிலுள்ள பேச்சுவழக்கு மொழியை அறிந்து அதனோடு இணைந்தே மொழிச் சீராக்கத்தை ஏற்படுத்துதல் உகந்தது. தற்போதைய மாவட்ட ஆரம்ப ஆசிரியர் நியமனத் திட்டத்தில் இந்தச் சிக்கல், ஓரளவு தவிர்க்கப்படுகின்றது எனலாம்.

ஆண்டு 1 ல் பேச்சு வழக்குடன் இணைந்து ஆரம்பிக்கப்படும் மொழி விருத்திச் செயற்பாடுகள், ஆண்டு இரண்டிலிருந்து ஒத்த ஒலிகளைக் கொண்ட எழுத்துச் சொற்கள், அடிப்படை இலக்கணம் என்றவாறு வளர்ந்து செல்வதை ஆசிரியர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் நன்று. வாசித்தல், எழுதுதல் போன்ற செயற்பாடுகளில் மாத்திரமல்லாது, கேட்டல், பேசுதல் போன்ற மொழித்திறன் செயற்பாடுகளிலும் செம்மையான மொழியையே ஆசிரியர்கள் பிரயோகிக்க முயலவேண்டும். திருத்தமாக மொழியைப் பேச வேண்டுமேயெனின், திருத்தமான மொழியைக் கேட்க வேண்டும். அப்போதுதான் வாசிப்பனவற்றைப் புரிந்து செம்மையான மொழியில் எழுதவும் முடியும். சில ஆசிரியர்கள் பேசும்போது பேச்சுவழக்கிலும், எழுதும்போது திருந்திய வழக்கிலும் மொழியைப் பிரயோகிக்க எத்தனிப்பது பொருத்தமானதன்று. பேசும்போதும், மாணவர்களைப் பேச வழிநடத்தும் போதும், திருத்தமான மொழியிலேயே பேசுவதற்கு நெறிப்படுத்தல் வேண்டும்.

ஆகவே ஆரம்ப வகுப்புகளில் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் பேச்சு வழக்குடன் இணைந்தாலும் படிப்படியாக மொழியைச் செம்மைப்படுத்திச் சீராக்கம் செய்து மொழியைச் செம்மைப் படுத்திச் சீராக்கம் செய்து கற்பிக்க வேண்டுமென்பதைப் புரிந்து கொள்ளல் நன்று.

ஆசிரியர் (தி)கைப்பு

மாணவன் : தந்தைக்கு எதிர்ச்சொல் ''தாய்'' என்று நேற்றுச் சொன்னீர்கள். இன்று ''மகன்'' என்று சொல்லுகின்றீர்கள். நாளைக்கு வேறு ஏதாவது சொல்லுவீர்களா?

## வசதிகுறைந்த பாடசாலைகளில் உள்ள மெதுவாகக் கற்போருக்கான தொழிற்பாடுகள்

**M. P. M. M. ஷிப்லி**

சென்ற இதழில் நாம் மொழி, அழகியல், சுற்றாடல் ஆகியவற்றில் மெதுவாகக் கற்போரின் திறன்களை வளர்ப்பதற்கான சில வழிமுறைகளைப் பற்றி எடுத்துக் கூறினோம். இனி ஆரம்ப வகுப்புகளில் கற்கும் வசதிகுறைந்த பாடசாலைகளைச் சேர்ந்த மெதுவாகக் கற்கும் மாணவர்களின் கணிதத் திறன்களை விருத்தி செய்தலைப் பற்றி ஆராய்வோம்.

இம்மாணவரிடையே கணிதம் கற்றல் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

1. வடிவங்கள், அளவுகள், நிறங்கள், போன்றவை பற்றிய விளக்கம் குறைவு.
2. உயரம், நிறை, பரப்பளவு ஆகியவற்றை அனுமானிக்கும் திறன் குறைவு.
3. அடிப்படைக் கணிதச் செய்கைகளில் திறன் குறைவு.

ஆண்டு 1, ஆண்டு 2 வகுப்பு மாணவர்களைப் பொருத்த மட்டில் இக்குறைபாடுகளுக்கான முக்கிய காரணம் அவர்களது அண்மைச் சூழலில் இவற்றிற்கான அனுபவங்களைப் பெறுவதற்குரிய வாய்ப்பின்மை அல்லது வாய்ப்புக் குறைவு என்பதேயாகும். எனவே ஆரம்ப வகுப்பில் மாணவர்களைப் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடச் செய்வதன் மூலம்

மேற்குறித்த எண்ணக் கருக்கள் பற்றிய விளக்கத்தை ஏற்படுத்த முடியும். இதன் காரணமாகவே ஆண்டு 1 ஆசிரியர் கைநூலில் கணித பாடந்தொடர்பாக முதலாந்தவணையில் மாணவர்கள் சுதந்திரமாக செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என விதந்துரைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக பல்வேறு நிறங்களேயும் அளவுகளேயும் கொண்ட சதுரம், முக்கோணி, செவ்வகம், வட்டம் போன்ற கேத்திர கணித தளவடிவங்களுடன் மாணவர்கள் செயற்படுவதனுல் அவற்றின் நிறம், அளவு, வடிவம் என்பன பற்றிய விளக்கத்தைப் பெற முடியும். மேலும் இத்தள வடிவங்களேக் கொண்டு சமச்சீரான உருக்களேயும் கட்டியெழுப்ப முடியும். ஆரம்ப நிலேயில் வழங்கப்படும் இவ்வனுபவம் அவர்களது எதிர்கால கணித எண்ணக்கரு விருத்திக்குப் பெரிதும் துணே புரியும்.

வசதி குறைந்த பாடசாலேகள் என நாம் கருதும் பாடசாலேகளுள் அநேகமான பாடசாலேகளில் கற்றலுக்கு உதவக் கூடிய இயற்கை வளங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. சுற்ருடலில் இருந்து பெறக் கூடிய இலேகள், காய்கள்,காய்ந்த விதைகள்,மரத்தடிகள், மற்றும் உபயோகத்தில் இருந்து நீக்கப்பட்ட தகரப் பேணிகள், போத்தல்கள், மூடிகள் என்பவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இவ்வாருன பொருள்களேப் பயன்படுத்தி எவ்வாறு செயற்பாடுகளேத் திட்டமிடலாம் எனப் பார்ப்போம். நீளம், உயரம் என்பவற்றை அளப்பதற்கு மரத்தடிகள், நீண்ட கோல்கள் போன்ற நியமமற்ற அலகுகளேப் பயன்படுத்தலாம். இவற்றைக் கொண்டு பாடசாலே வளவிலுள்ள அல்லது வகுப்பறையினுள் ஏதேனுமொரு குறித்த நீளத்தை அல்லது உயரத்தை அளக்கச் செய்யலாம். இதனூடாக மாணவர் நியமமற்ற அலகுகளேக் கொண்டு நீளங்களேயும் உயரங்களேயும் அளக்கும் திறனே விருத்தி செய்து கொள்வர். மேலும் படிப்படியாக நியம அலகுகளினுல் அளப்பதற்கும், நியமமற்ற அலகுகளினுல் அளப்பதற்கும் உள்ள வேறுபாட்டையும் நன்கு விளங்கிக் கொள்வர். குறித்த ஒரே நீளத்தை வித்தியாசமான நீளங்களேக் கொண்ட தடிகளினுலோ கோல்களினுலோ வெவ்வேறு மாணவர்கள் அளக்கும் போது ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான பேறுகள் கிடைக்கப் பெறும். இவ்வனுபவத்தைப் பெற்ற பின்னர் சம நீளமுள்ள கோல்களேக் கொண்டு ஒவ்வொருவரும் அதே நீளத்தை மீண்டும் அளக்கச் செய்யலாம். இதிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கப் பெறும் பேறுகள் ஒத்தனவாக இருக்கும். இவ்வாருன செயற்பாட்டின் மூலம் நியம அலகு என்ருல் என்ன? அதன் பயன் தருதன்மை யாது? என்பனவற்றை மாணவருக்கு இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

சில மாணவர்கள் அடிப்படைக் கணிதச் செய்கைகளே, அதாவது கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்பனவற்றைச் செய்யும் போது குறிப்பாக இடப்பெறுமானம் தொடர்புபட்ட கணிதச் செய்கைகளில் பிழை விடுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இதற்குக் காரணம் இலக்கங்களின் இடப்பெறுமானம் பற்றிய எண்ணக்கரு விருத்தியடையாமையேயாகும்.

ஆண்டு 2 இல் பூச்சியம் பற்றிய எண்ணக் கருவை விருத்தி செய்ததன் பின்னர் ஈரிலக்க எண்களே எழுதுவதற்கும், வாசிப்பதற்குமான செயற்பாடுகளில் மாணவர்களே ஈடுபடுத்துதல் நன்று. ஈரிலக்க எண்களில் ஒவ்வொரு எண்ணும் அது அமைந்துள்ள இடத்தைப் பொறுத்து பெறுமானத்தைப் பெறுகின்றன என்பதை எண்சட்ட மூலம் விளங்கப்படுத்தலாம். இதன்பின்னர் ஈரிலக்க விடையைத் தரக்கூடிய இரு ஓரிலக்க எண்களேக் கூட்டும் பயிற்சிகளே மாணவருக்கு வழங்கலாம். உதாரணமாக.

$2 + 8, 2 + 9$

$3 + 7, 3 + 8, 3 + 9$

$4 + 6, 4 + 7, 4 + 8, 4 + 9$

..........................................................................

..........................................................................

$8 + 2, 8 + 3, 8 + 4, 8 + 5, 8 + 6, 8 + 7, 8 + 8, 8 + 9$

$9 + 2, 9 + 3, 9 + 4, 9 + 5, 9 + 6, 9 + 7, 9 + 8, 9 + 9$

இவ்வாருன பயிற்சியின் மூலம் மாணவர் 20 இலும் குறைந்த எண்களின் இடப்பெறுமானத்தை விளங்கிக் கொள்வது இலகுவாக அமையும். இதனேத் தொடர்ந்து ஓரிலக்க எண்ணென்றுடன் ஈரிலக்க எண்ணேக் கூட்டும் பயிற்சிகளிலும், இறுதியாக கூட்டுத் தொகை 99 இற்கு மேற்படாதவாறு ஈரிலக்க எண்ணென்றை ஈரிலக்க எண்ணென்றுடன் கூட்டும் பயிற்சிகளிலும் ஈடுபடுத்துதல் கூடிய பலனே அளிக்கும். இங்கு கொண்டு செல்லுதல் இல்லாத பயிற்சிகள் முதலிலும் கொண்டு செல்லுதல் உடனுன பயிற்சிகள் பின்னரும் வழங்கப்படுதல் நன்று.

இவ்வாருகவே மற்றைய வகுப்புகளிலும் அவ்வவ் வகுப்புகளுக்கேற்ப பயிற்சிகளேத் திட்டமிடுதல் அவசியமாகும். எண்சட்டம் பயன்படுத்தப்படும் போது ஆசிரியர் மாணவர் பக்கமாகவே நின்று விளங்கப் படுத்துதல் மிக முக்கியமாகும்.

மெதுவாகக் கற்போருக்காகப் பரிகார நடவடிக்கைகள் எடுக்கு முன்னர் அவ்வாருன மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் காணப்படும் கற்றல் குறைபாடுகளே ஆசிரியர் தனித்தனியாகவே இனங்கண்டிருக்க வேண்டும். அவற்றிற் கேற்றவாறு அவர்கள் ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட முறைகளேக் கடைப்பிடிக்கவும் தயாராக இருத்தல் அவசியமாகும்.

## வளம் பெறும் பாடசாலேகளில் ஆரம்பக் கல்வியின் தரத்தினே மேம்படுத்துவதற்கான கையாண்டு பார்த்தல்

L. S. குறுப்பு

இலங்கையில் 9264 பாடசாலேகளில் ஆரம்பக் கல்வி போதிக்கப்பட்டு வருகின்றது. அவற்றுள் 22.1% பாடசாலேகளில் மாணவர்களின் எண்ணிக்கை 100க்கும் 150க்கும் இடைப்பட்ட தொகையினரே உள்ளனர். இவற்றுள் 6% பாடசாலேகளில் ஓர் ஆசிரியரும், மேலும் 8% பாடசாலேகளில் இரு ஆசிரியர்களும் கடமையாற்றுகின்றனர். இவ்வாருன பாடசாலேகள் இலங்கையின் பல்வேறு பாகங்களில் காணப்படுகின்றன. கரையோரப் பகுதிகளிலும், தூர கிராமப் புறங்களிலும், மலேநாட்டுப் பகுதிகளிலுமல்லாது, பிரதான நகரங்களின் ஒதுக்குப் புறங்களிலும், பிரதான பாதைகளுக்கு அண்மையிலும் இவ்வாருன பாடசாலேகள் அமைந்திருப்பதைப் பெருந்தொகையானேர் அறிந்திருப்பதில்லே.

எமது சமூகத்தில் மிகவும் கீழ் மட்டத்திலுள்ள மக்கள் பிரிவினரின் பிள்ளேகளின் ஆரம்பக் கல்வி இவ்வாருன பாடசாலேகளால் பூர்த்தி செய்யப்படுகின்றன. இவற்றுள் விசேடமாகக் காணக்கூடிய பண்புகளேக் குறிப்பிடுவது முக்கியமெனக் கருதுகின்றேன்.

1. பௌதிக வளம் குறைவு.
2. போதிய ஆசிரியர் இல்லாமை.
3. மாணவர்களின் வரவு குறைவு.
4. ஆசிரியர்களின் கவனயீனம்.
5. பாடசாலேக்கும் சமூகத்திற்குமிடையிலான தொடர்பு குறைவு.
6. பாடசாலேப் பாடங்கள் அன்ருட வாழ்க்கைக்குப் பயன்படாமை.

Appropriate Technology Services
121, POINT-P. O ROAD
NALLUR, JA  NA
No..........

7. பாடசாலைகள் மாணவர்களைக் கவராமை.
8. அடிப்படைத் தேவைகளும் வசதிகளும் இல்லாமை.
9. கற்றல்/கற்பித்தல் தொழிற்பாடுகளுக்குப் புது முயற்சி இல்லாமை.
10. கற்றல் துணை நூல்களோ, சுய கற்றல் முறைகளோ இல்லாமை.
11. கற்பித்தல் தொழிற்பாடுகளுக்குத் தேவையான ஆலோசனைகளும் மதிப்பீடுகளும் பிரதேச ரீதியில் கிடைக்காமை.
12. மாணவர்கள் கல்வியில் இடை நிறுத்தம்.

இவ்வாறுன பண்புகளை உடைய பாடசாலைகளுக்கு விசேட உதவி தேவைப்பட்டிருக்கும். இச்சமயத்தில் யுனிசெப் (UNICEF) நிறுவனம் உதவி வழங்க விருப்பம் தெரிவித்தது. இதற்கேற்ப கையாண்டு பார்க்கும் நோக்குடன் ஐந்து மாவட்டங்களில் இருந்து 20 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. அவற்றுள் 15 சிங்கள மொழிப்பாடசாலைகள். மற்றையவை தமிழ் மொழிப்பாடசாலைகள் ஆகும். இச் செயற்றிட்டத்தின் அடுத்த கட்டம் அதே மாவட்டங்களில் இதுபோன்று இன்னும் சில பாடசாலைகளைத் தெரிந்தெடுத்துதவுதல் ஆகும். மூன்ருவது கட்டமாக ஏனைய மாவட்டங்களிலும் இது போன்ற பாடசாலைகளைத் தெரிந்தெடுத்து உதவி வழங்குதல் ஆகும்.

இப்பாடசாலைகளுக்காகத் திட்டமிடப்பட்டுள்ள வேலைத் திட்டத்தினைப் பூரணப் படுத்துவதற்கு யுனிசெப் நிறுவனத்தின் உதவி கிடைப்பதோடு அதுபல கட்டங்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

1. கற்பித்தல் புதுமுறைகளுக்கு ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்.
2. வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி.
3. கற்பித்தல் உபகரணங்களைத் தயாரித்தலும் உபயோகித்தலும்.
4. அதிபர்களுக்கான விசேட பயிற்சி, கருத்தரங்குகள் நடத்தல்.
5. பிரதேச அதிகாரிகளுக்கான கருத்தரங்கு.
6. சமூக உறுப்பினர்கள் பங்குபற்றலை விருத்தி செய்வதற்கான கருத்தரங்கு.
7. பாடசாலை மூலம் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
8. இலகுவான கற்பித்தல் உபகரணங்களையும் உதவிகளையும் வழங்கல்.

இவ்வாறுன பாடசாலைகளுக்கு மாணவர் தொகைக்கேற்ப ஒரு வகுப்பிற்கு ஓர் ஆசிரியர் என்ற ரீதியில் ஆசிரியர்களை நியமிப்பது கடினமாயுள்ளது. இதனுல் வகுப்புகளின் எண்ணிக்கையை விட ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவானதாகவே இருக்கும். இதன் காரணமாக ஒரே ஆசிரியர் ஒரே நேரத்தில் பல வகுப்புகளுக்குக் கற்பிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகின்றது. ஆகவே பல்தரக் கற்பித்தலுக்காக ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி அளித்தலும், அவற்றுக்குத் தேவையான உபகரணங்களைத தயாரிக்க்வும், பிரயோகிக்கவும் பயிற்றுவிததலும, சுயகற்றலுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தலும், விசேட பாடங்களைத் திட்டமிடப் பழக்குதலும் அவசியமாயுள்ளது.

இந்தச் செயற்பாடுகளைத் திறமையாக நிறைவேற்றிக் கொள்வதற்கு கையாண்டு பார்க்கும் நோக்குடன் பெரும் பகுதி வேலைகள் இப்பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

பல்தரக் கற்பித்தல் போன்று பல்தர நிலைகளில் ஏற்ற மாணவர்களுக்கான பாடங்களும் திட்டமிட்டுப் பாடசாலைகளில் கையாண்டு பார்க்கப்பட்டுள்ளன. பல்தர நிலைகளில் கையாண்டு பார்த்ததில், வகுப்புகளாக வகைப்படுத்தப்படாத எண்ணக்கருக்களே பிரயோகிக்கப் பட்டன. இவற்றின் முலம் கிடைக்கப்பெற்ற பெறுபேறு மிகவும் ஆச்சரியத்துக்குரியது.

இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு ஓராண்டுக்குப் பின் இப்பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் போது, மேற்கூறப்பட்ட இருபது பாடசாலைகளில் பதினைந்து பாடசாலைகளின் தரங்கள் துரித முன்னேற்றம் அடைந்திருந்ததைக் காணக் கூடியதாயிருந்தது. அவைகளில் காணப்பட்ட சில மாற்றங்கள் பின்வருமாறு.

1. ஆசிரியர் குறைவான சந்தர்ப்பங்களில் கூட மாணவர்கள் வேலையில் ஈடுபட்டிருத்தல்.
2. பாடசாலை வேலைகளுக்குப் பெற்ருேர் ஒத்துழைப்பு வழங்கல். (உ.ம். இலைக்கஞ்சி தயாரித்தல், வேலியடைத்தல், கூரைவேய்தல்.)
3. பாடசாலைத் தோட்டம், பிரயோசனமளிக்கக் கூடிய வகையில் ஒழுங்கமைக்கப் பட்டிருத்தல்.
4. வகுப்பறை ஒழுங்கமைப்பில் ஏற்பட்டிருந்த மாற்றம.
5. பாடசாலையை விருப்பத்திற்குரிய இடமாக மாற்றுவதற்காக பிள்ளைகளும் பெற்ருேரும் உதவியளித்தல்.
6. குறித்த நேரத்திற்குப் பாடசாலையை ஆரம்பித்தலும் மாணவர்களின் வரவில் காணப்பட்ட வளர்ச்சியும்.
7. விசேட கற்றல் உபகரண உபயோகமும், அவற்றின்கண் மாணவர் காட்டிய ஆர்வமும்.
8. சுற்ருடலை கல்விச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்துதல்.
9. பாடசாலைகளில் பல்வேறு விழாக்களை ஆரம்பித்தல்.
   உ-ம்.
   1. மாணவர்கள் பாடசாலைக்கு வரும் முதல் தின விழா
   2. ஆண்டு இறுதியில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள்.
   3. விளையாட்டுப் போட்டி.
10. வகுப்பறைகளை வேறுபடுத்திக் கொள்வதற்குப் பெற்ருேர்கள் தற்காலிக அமைப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

இரண்டாம் கட்ட பாடசாலைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு முதலில் ஆரம்ப கட்டத்தில் எடுத்த முயற்சிகளின் பெறுபேற்றை ஆராய்ந்து எதிர்கால வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டு ஆலோசனைகளை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும், ஆசிரியர்களை உற்சாகப்படுத்தக் கூடிய செயற்பாடுகளை இனங்காண்பதற்கும், இப்பாடசாலைகள் தொடர்பாக தேசிய மட்டத்தில் செயற்படுத்துவதற்கான அமைப்பொன்றினை ஏற்படுத்திக் கொள்வதற்கும், சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும், கல்வி அமைச்சின் அதிகாரிகள் பங்குபற்றும் கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கின் இறுதியில் பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றுள் சில பின்வருமாறு.

1. வளம் பெற்று வரும் பாடசாலைகளின் வளர்ச்சிக்கான வேலைத்திட்டம் தேசிய கல்வித் திட்டத்தில் முக்கிய இடம் பெறல் வேண்டும்.
2. இந்த அபிவிருத்தி நடவடிக்கைக்காகத் தேசிய கல்விச் செலவில் 20-30% அளவில் ஒதுக்கப்பட்டு நிலைத்த நிதியமாக அமைக்கப்படல் வேண்டும்.
3. விசேட அதிகாரியின் கீழ் விசேட பிரிவொன்றை இதற்காகக் கல்வி அமைச்சில் அமைத்துக் கொள்ள வேண்டும்.
4. சிறு பாடசாலைகளுக்காக உதவி புரியும் சகல செயற்றிட்டங்களும் கல்வி அமைச்சின் கீழ் தொடர்புபடுத்தப்படல் வேண்டும்.

**பிரதேச அமைப்பு**

1. ஆரம்ப கல்விக்காக விசேட அதிகாரியின் கீழ் ஓர் அமைப்பினை ஏற்படுத்தல்.
2. மதிப்பீட்டின் மூலம் தேவைகளை இனங்காணல்.
3. இப்பாடசாலைகளுக்காக செயல்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டத்தின் மூலம் மேலும் வளர்ச்சி பெறச் செய்தல்.
4. இப்பாடசாலைகளின் வசதிகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு முறைகளைக் கையாளுதல்.

**பாடசாலைத் தலைவர்கள்**

சிறு பாடசாலைகளின் தலைவர் இந்தச் செயற்றிட்ட செயற்பாடுகளில் முக்கிய இடத்தினை வகிப்பதனால் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் சபையொன்றின் மூலம் பாடசாலைத் தலைவர் தெரிவு செய்யப்படுவதோடு, பாடசாலைக்குப் பொறுப்பாக இருக்கும் காலங்களில் அவரை பயிற்சிக் கருத்தரங்குகளில் பங்குபற்றச் செய்யவும் வேண்டும்.

தற்காலிக பதிற் கடமையாற்றும் பாடசாலைத் தலைவர்களை நியமிக்கும் திட்டத்தை ஒழித்து விடவேண்டும். அவரின் கடமை பொறுப்புக்களை சக்தியுள்ளதாக ஆக்க வேண்டியதோடு தேவையான வசதிகளையும், அதிபர் விடுதி என்பவைகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

**ஆசிரியர்கள்**

இந்தப் பாடசாலைகளின் ஆசிரியர்களை உற்சாகப் படுத்துவதற்கான ஒரு திட்டத்தை அல்லது மேலதிக கொடுப்பனவு முறையொன்றினை ஆரம்பித்தல் வேண்டும். தேவைக்கும் காலத்திற்கும் ஏற்ப சேவைக்கால கருத்தரங்குகளை ஏற்படுத்தல் வேண்டும். திறமையான ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு அல்லது கௌரவப் படுத்தும் முறையொன்று ஏற்படுத்தப்படல் வேண்டும்.

**வகுப்பு முறையை பயன்படுத்துதல்**

பல்தரக் கற்பித்தல் முறையை ஏற்படுத்துதல் வேண்டும். முதல் மூன்று ஆண்டு தரங்களுக்குப் பதிலாக தரங்களாக வகுக்கப்படாத வகுப்பை நடாத்தல், முதல் ஆண்டுக்காக ''பல் நிலைப்பிரவேசம்'', நீடிக்கப்பட்ட ஆரம்பகல்வி எல்லை'' போன்ற எண்ணக்கரு ஒன்றினைக் கையாண்டு பார்க்கக் கூடியதும், புது முறைகளைக் கையாண்டு பார்க்கக் கூடியதும், புதுமுறைகளைக் கையாளக் கூடிய முறைகளையும் பாடசாலைகளில் உபயோகப்படுத்தல் வேண்டும்.

இவ்வாறான ஆலோசனைகள் பல மேலிட்ட போதும் செயற்படுத்தும் கால எல்லைகளில் எவ்வளவு தூரத்திற்கு செயற்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தேடிக் கண்டுபிடிப்பது பொருத்தமானதாகும். எவ்வாறு இருந்த போதும் கற்றல்/கற்பித்தல் செயற்பாடுகளுக்காக கவனமெடுத்தல் வேண்டும் என்ற ஆலோசனையை ஏற்றுக் கொள்ளல் வேண்டும். ஆசிரியர்களின் எண்ணக்கருவினை ஒருங்கமைத்தல், வேலைக்குட்படுத்தல் என்பவற்றுடன் இவை ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளது. கற்கும் திறமையீனத்தை நிவர்த்தி செய்வதற்காக விசேட கல்வி அவசியமாயுள்ளது. ஒவ்வொரு பாடசாலையும் பெற்றோரிடத்துக் காட்டும் விருப்பத்தின் பேரிலேயே பாடசாலைக்குத் தேவையான உதவிகள் கிடைக்கப் பெறுகின்றன.

இவையாவும் பாடசாலைத் தலைவரின் செயலாற்றலில் தங்கியுள்ளன. அவர்கள் சக்திவாய்ந்த முகாமையாளராக மாறும் அளவிற்கு ஏற்ப பாடசாலையின் பெறுமான தன்மையும் வளர்ச்சிபெறும். எவ்வாறு இருந்த போதிலும் இதுவரை இந்தப் பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர்களின் வறுமையை, அல்லது சமூக பொருளாதார நிலையை எடுத்துக் காட்டும் நிறுவனமாக இருக்கும் நிலையில் நின்றும் மீட்பதற்கு இவ்வாறான செயற்றிட்டங்களால் மட்டும் நிறைவேற்ற முடியாதென்பதையும், தேசிய மட்டத்திலான முயற்சி ஒன்றும் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்பதையும் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

தமிழாக்கம் : S.M.R. சூதீன்

## பரிகாரக் கற்பித்தல்

**- M. P. M. M. ஷிப்லி -**

நீங்கள் இதை வாசித்துக் கொண்டிருக்கும் போது என்ன நிகழுகிறது எனச் சற்று ஆராய்வோம். உங்கள் கண்கள் இதிலுள்ள சொற்களைப் பார்க்கின்றன. நீங்கள் அவற்றை மௌனமாக வாசிக்கின்றீர்கள். அச்சொற்கள் உங்கள் மூளைக்குச் செல்கின்றன. அவை அங்கு ஒழுங்குபடுத்தப்பட்டு அவற்றின் கருத்து உங்கள் மனதிற் பதிகின்றது. அக்கருத்தை நீங்கள் விளங்கிக் கொண்ட விதத்தில் நீங்கள் தொழிற்படுகின்றீர்கள். இந் நிகழ்ச்சித் தொடரினால் ஏற்பட்டது என்ன? வாசிப்பின் மூலம் நீங்கள் பெற்ற தகவலை விளங்கிக் கொண்டு அதற்கேற்ப தொழிற்பட்டீர்கள். இந்நிகழ்வை நாம் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

பெறல் — Receive
முறைப்படுத்தல் — Process
துலங்கல் — Respond

இங்கு வாசித்த விடயம் தூண்டியாக (Stimulus) இருந்தது. வாசித்தலினால் விடயம் பெறப்பட்டு, முறைப்படுத்தப்பட்டு அதற்கேற்ப துலங்கல் ஏற்பட்டது. இந் நிகழ்வின் போது கண் (பார்வை) செயலில் ஈடுபட்டிருந்தது. எனவே இங்கு தொடர்பு பட்டிருந்தது புலன் பார்வையாகும். இதைப் போன்றே ஒருவர் கூறும் விடயத்திற்கேற்ப நாம் தொழிற்படும் போது செவிப்புலன் தூண்டியாகின்றது. இவ்வாறு எமது புலன்களினூடாகப் பெறப்படும் தூண்டல்களுக்கேற்ப நாம் தொழிற்படுகின்றோம்.

இந்நிகழ்வை இன்னுமொரு விதத்தில் ஆராய்வோம். நாம் வாசித்த விடயம் மூளையில் பதிந்து அங்கு அது முறைப்படுத்தப்பட்டு காணல் (Perception) ஒன்று ஏற்படுகின்றது. இக்காணலின் மூலம் வாசித்த விடயம் பற்றிய விளக்கம் ஏற்படுகிறது. இவ்விளக்கத்திற்கேற்ப நாம் துலங்குகிறோம். வாசித்த விடயத்தை கிரகித்து விளங்கிக் கொள்ளுதலைக் கற்றல் என்போம். எனவே கற்றல் நிகழ்வதற்கு தூண்டிகள் (Stimuli) அவசியம். இத்தூண்டிகளை முறைப்படுத்துவதற்குப் புலன்கள் சரிவரத் தொழிற்பட வேண்டும். முக்கியமாகக் கேட்டல் (Listening), பார்த்தல் (Seeing), உளவியக்கம் (Psychomotor) என்பன கற்றல் நிகழுவதற்கு அவசியமானவையாகும். இதனைப் பின்வருமாறு காட்டலாம்.



இதிலிருந்து கற்றல் நிகழுவதற்குப் புலன்களின் தொழிற்பாடு அவசியம் என்பதைக் காணலாம். அதோடு உளவியக்கத் திறன்களும் அவசியமாகும். எனவே எமது மாணவரிடையே கற்றல் குறைபாடுகள் காணப்படும் போது, அதாவது அவர்கள் கற்றலில் பின்தங்கி இருக்கும் போது, அவர்களது உளவியக்கத்தில் அல்லது புலனியக்கத்தில் ஏதேனும் குறைபாடுகள் இருக்க முடியும். இவ்வாறான கற்றலில் பின் தங்கியுள்ள மாணவர்களின் குறைபாடுகளைக் கண்டுபிடித்து அவற்றுக்கான பரிகாரங்களைத் தேடுவதே பரிகாரக் கற்பித்தல் ஆகும். இவ்விடத்தில் நாம் இன்னுமொரு விடயத்தையும் மனதிற் கொள்ள வேண்டும். பொதுவாக இளம்பிள்ளைகள் பாராட்டுக்களையே விரும்புவர். ''மோப்பக் குழையும் அனிச்சம்'' என்பதற்கேற்ப கடுஞ்சொற்கள் அவர்களது உள்ளத்தைத் தாக்கும். பொதுவாக நாங்கள் வகுப்பறையிலே சுறுசுறுப்பில்லாத, பின்தங்கிய மாணவரை ஆசிரியர் ஏசுவதையும் தண்டிப்பதையும் கண்டிருக்கிறோம். இவ்வாறு செய்வதனால் அவர்கள் இன்னும் பின்தங்கிய நிலையை அடைவர். எனவே மாணவர்களின் கற்றல் குறைபாடுகளுக்கான காரணிகளை இனங்காண்பதால் அதற்கேற்ப பரிகாரம் தேடுவதும் மிகவும் முக்கியமாகும். இவ்வடிப்படையிலே நோக்கும் போது மாணவர்கள் கற்பதற்கு புலன், உளவியக்கம், ஊக்குவிப்பு ஆகியன காரணிகளாக அமைவதைக் காணலாம்.

பின்தங்கி அல்லது மெள்ளக்கற்கும் மாணவர்கள் அனைவரும் ஒரே குறைபாட்டை உடையவர்கள் அல்லர். ஒரே வகுப்பில் வேறுபட்ட குறைபாடுகளின் காரணமாகக் கற்றலில் பின்தங்கிய மாணவர்கள் இருப்பர். இவர்களது குறைபாடுகள் யாவை என நாம் முதலில் இனங்காண வேண்டும். வெவ்வேறு குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கு வெவ்வேறு முறைகளில் பரிகாரந்தேட வேண்டியது அவசியம். ஆனால் ஒவ்வொரு மாணவனுக்கும் தனித்தனியே பரிகாரக் கற்பித்தல் நடத்துவது இயலாத காரியம். எனவே நாம் இவ்வாறான மாணவரிடையே பொதுவாகக் காணப்படும் கற்றல் தொழிற்பாடுகளைத் திட்டமிட வேண்டும். இவ்வாறு திட்டமிடுவதற்கு முன்னர், நாம் இம்மாணவர்களிடம் எதனை எதிர்பார்க்கிறோம்? எவ்வாறு இவர்களின் கற்றல் குறைபாடுகளை நிவர்த்தி செய்யப் போகிறோம்? இதிலிருந்து நாம் அடையவிருப்பவை யாவை? என்ற வினாக்களுக்கு விடை காண வேண்டும். இதனை இன்னும் விளக்கமாகக் கூறினால் நாம் பின்வரும் வினாக்களை எம்மிடமே வினவிக் கொள்ள வேண்டும்.

1. பிள்ளைகள் என்னென்ன காணல் திறன்களை (Perceptual skills) அடைவதற்கு உதவ நான் முயற்சிக்கிறேன்?
2. பிள்ளைகள் இத்திறன்களை அடைவதற்கு உதவக்கூடியதாக என்னென்ன கற்றல் அனுபவங்களை நான் பயன் படுத்தலாம்?
3. இது பயன்பாடுடையதாக அமைவதற்கு எந்தெந்த கலைத்திறன்களையும் அமைப்புகளையும் நான் பயன் படுத்தலாம்?
4. இத் திறன்களை அடைந்துள்ளார்களா என நான் எவ்வாறு தீர்மானிக்கலாம்?

இவ்வினாக்களுக்கான விடையைப் பெற்றால் பரிகாரக் கற்பித்தலுக்கான அடிப்படைத் திட்டத்தை வகுக்க முடியும். முதலாவது வினாவிலிருந்து, காணல் பகுப்பாய்விலிருந்து பரிகாரக் கற்பித்தலுக்கான நோக்கங்களைத் தெரிவு செய்தல் வேண்டும் என்பதும் அடுத்து கற்றல் அனுபவங்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதும் தெளிவாகின்றது. அதன் பின்னர் கலைத்திறன்களையும் கடைசியாக எமது நோக்கங்கள் நிறைவேறினவா என மதிப்பீடும் செய்யப்படல் வேண்டும் என்பதும் தெளிவாகிறது. எனவே திட்டமிடல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை பின்வருமாறு காட்டலாம்.




இவ்வரிப்படத்திலிருந்து, பரிகாரக் கற்பித்தலுக்கான நோக்கங்களைத் தெரிவு செய்து, அடுத்து அவற்றிற்கேற்ற கற்றல் அனுபவங்களைத் தெரிவு செய்தல் வேண்டும்; பின்னர் அதற்கான கலைத்திறன்களையும் அமைப்புகளையும் தெரிவு செய்ய வேண்டும்; கடைசியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும்; என்பதைக் காணலாம். இவ்வொழுங்கிலே செல்லும்போது கடைசிக் கட்டமான மதிப்பீட்டின் போது நோக்கங்கள் யாவும் நிறைவேற்றப்படவில்லை எனக் காணப்பட்டால் மீண்டும் முன்பு போன்றே அதே ஒழுங்கில் திட்டமிட வேண்டும். நோக்கங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னரே இது நிறைவுபெறும்.

இனி இவ்வடிப்படையிலே மாணவர்களுக்குத் தேவையான வற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. மாணவர்கள தூண்டிகளைப் பொருத்தமான புலனுணர்ச் சிக்குரிய வழிகளின் ஊடாகப் பெறுவதற்குப் பயிற்றுவிக்கப்படல் வேண்டும்.
2. அவர்களுக்குத் தகவல்களை விளங்கிக் கொள்வதற்கு இட்டுச் செல்லும் வகையில் முறைப்படுத்துவதற்கான பயிற்சி தேவை.
3. அவர்களுக்குத் தமது காணல்களை ஒன்று சேர்ப்பதற்கு முறையான வழியில் துலங்குவதற்கான வாய்ப்பு தேவை.

இதிலிருந்து, நாம் பரிகாரக் கற்பித்தலுக்கான நோக்கங்களை பின்வருமாறு தீர்மானிக்கலாம். இவை உதாரணமாகவே தரப்பட்டுள்ளனவேயன்றி, இவை மட்டுந்தான் நோக்கங்களாக அமைய வேண்டுமென்பதில்லை. தேவைக்கேற்ப நோக்கங்கள் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

### நோக்கங்கள்

**(அ) கேட்டற்றிறன்கள்**

1. வேறுபட்ட ஒலிகளை இனங்கண்டு வகைப்படுத்துந் திறனைப் பெறல்.
2. ஒத்த ஒலிகளைப் பிறப்பிப்பதற்கும் மீளப் பிறப்பிப்பதற்குமான திறனைப் பெறல்.
3. ஒலிக் கோலங்களையும் தொடர்ச்சிகளையும் மீளச் செய்யும் திறனைப் பெறல்.
4. கதையொன்றின் அல்லது நிகழ்வொன்றின் பொழிப்பை மீளக் கூறுந் திறனைப் பெறல்.
5. செவிமடுத்த தகவல் அல்லது பணிப்புரைக்கு ஏற்ப துலங்குவதற்கும் தொழிற்படுவதற்குமான திறனைப் பெறல்.

**(ஆ) பார்வைத் திறன்கள்**

1. வேறுபட்ட பார்வைத் தூண்டிகளை (Visual Stimuli) இனங் கண்டு வகைப்படுத்துந் திறனைப் பெறல்.
2. கண்டவற்றை ஆக்குவதற்கும் மீள ஆக்குவதற்குமான திறனைப் பெறல்.
3. பார்வை நினைவில் (Visual memory) இருந்து

கண்டவற்றை ஆக்குவதற்கும் மீள ஆக்குவதற்குமான திறனைப் பெறல்.

4. எப் பரிமாணத்திலும் பார்வைக் குறிகளை (Visual Symbols) மீட்டறிவதற்கும் இனங்காண்பதற்குமான திறனைப் பெறல்.

5. பார்வை, கேட்டல் தூண்டிகளை இணைப்பாக்கஞ் செய்யுந் திறனைப் பெறல்.

6. கண்ட தகவல்களுக்கு ஏற்ப துலங்குவதற்கும் தொழிற்படுவதற்குமான திறனைப் பெறல்.

**(இ) உளவியக்கத் திறன்கள்**

1. பார்வை, ஒலி, ஸ்பரிசம் ஆகியவற்றினூடாகத் தூண்டிகளுக்குத் துலங்கும் திறனைப் பெறல்.
2. அசைவு, பார்வை, கேட்டல், ஸ்பரிசவுணர்ச்சி ஆகியவற்றுக்குரிய தூண்டிகளி னூடாகப் பொருள் கோடல் திறனைப் பெறல்.
3. ஸ்பரிசவுணர்வக்குரிய தூண்டிகளுக்கு மீட்டறியும், பொருள்கோளும், துலங்கும் திறனைப் பெறல்.
4. தமது சொந்த உடல் தொடர்பாக வெளிக்குரிய தொடர்புகள் (Spatial Relationships) பற்றிய விளக்கத்தைப் பெறல்.
5. கேட்டல், பார்வை, தூண்டிகளின் தூண்டற் பெருக கைகளையும் கண்களையும் இணைபாக்கஞ் செய்யுந் திறனைப் பெறல்.
6. அடிப்படையானதும் நுட்பமானதுமான உடலசை வுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் இணைபாக்கஞ் செய்வதற்குமான திறனைப் பெறல்.

இவ்வாறான திட்டத்திற்கேற்ப கடைப்பிடிக்கப்பட்ட பரிகார வேலைத்திட்டம் ஒன்றினிறுதியில் மாணவர் இந்நோக்கங்களிற் குறிப்பிடப்பட்டுள்ள திறன்களில் விருத்தி அடைந்திருக்க வேண்டும்.

இவ்வாறான பரிகாரக் கற்பித்தல் வேலைத்திட்டத்தைக் கையாளுவதற்குப் பின்வரும் படிமுறைகளைக் கடைப்பிடிப்பது பயனுடையதாகும்.

படி 1 மாணவரின் திறன்களைப் பரீட்சைகள் மூலம் ஆய்ந்தறிதல்.

படி 2 மேற்குறிப்பிடப்பட்ட நோக்கத் தொகுதிகள் ஒவ்வொன்றின் கீழும் மாணவரைப் பரீட்சித்தல்.

படி 3 மாணவரால் அடையப்பெறாத நோக்கங்களின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்பாடுகளைத் தெரிவு செய்தல்.

படி 4 வேலைத்திட்டத்தைத் தொடர்ந்து செய்து, மாணவர்களைப் படி 2 இல் பயன்படுத்தப்பட்ட பரீட்சையில் சிறிய கால இடைவெளிகளில் பரீட்சித்தல்.

பரிகாரக் கற்பித்தல் நடைபெறும் காலக்கெடுவில் மாணவர்களைத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யவேண்டும். அம் மதிப்பீடு ஒவ்வொரு மாணவனுக்கும் தனித்தனியாகச் செய்யப்படல் வேண்டும். அவற்றைப் பதிவு செய்து வைத்திருக்கவும் வேண்டும். ஏனெனில் தொடர்ச்சியான மதிப்பீட்டினால் மாணவரின் முன்னேற்றத்தை இலகுவில் அறிந்து கொள்ள முடியும். மேலும் பரிகாரக் கற்பித்தல் ஒரு குறிப்பிட்ட நிலையில் முற்றுப்பெற்று, மாணவன் மீண்டும் மற்றவர்களுடன் பொதுவான பாடத்திட்டத்தைப் பின்பற்றக் கூடியவனாக ஆக வேண்டும். இது நடைபெறாவிடில் பரிகாரக் கற்பித்தலினால் எவ்விதப் பயனும் கிட்டாது.

பரிகாரக் கற்பித்தல் மூலம் தமது வயதுக்கும், தாம் கற்கும் வகுப்பிற்கும் பொருத்தமான திறன்களைக் குறிப்பிட்டளவு காலத்தில் விருத்தி செய்து கொள்ள வேண்டும். அதன் பின்னர் அவர்கள் தமது சகாக்களுடன் பொதுப் பாடத்திட்டத்திற் கற்கக்கூடிய ஆற்றலைப் பெற வேண்டும்.

**பரிகாரக் கற்பித்தல் தொடர்பாகக் கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள்**

மாணவன்:
1. மாணவனிடம் ஏற்கனவே உள்ள திறன்கள், ஆற்றல்கள்.
2. மாணவனின் ஊக்கல் மட்டம்.
3. மாணவனின் எதிர்பார்ப்பு மட்டம்.
4. மாணவனின் தயார் நிலை ஆகியவற்றை மதிப்பிடுதல்.

ஆசிரியர்:
1. வகுப்பைப் பொறுத்தமட்டில் ஆசிரியரின் மனப்பாங்கு.
2. வகுப்பின் எதிர்பார்ப்பு
3. கற்பித்தல் முறைகள்.
4. ஊக்கல் முறைகள்.
5. வயதுக் குழுக்களுக்கான தொழிற்பாடுகளின் பொருத்தப்பாடு.

மூலம்: REMEDIAL TEACHING — McCreesh and Maher
Ward Lock — 1974

"The more numerous the sensory motor experinces, the more numerous the cognitive structures resulting in the greater number of tasks that can be resolved".

— Piaget —